உ

# வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.
பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

**Vol. 4 — December 1942 — No. 12**

விஷய சூசிகை. பக்கம்

| | |
|---|---|
| வைத்தியச்செய்தி | 1 |
| ஓர் அறிக்கை | 1 |
| தந்வந்தரியின் பெருமை (Dr. சுப்பிரமண்யம் அவர்கள்) | 1—7 |
| விஷமஜ்வரம் (Dr. K. அவர்கள்) | 7—15 |
| தினசரி விதி Lady Dr G. Nalani Ammal | 15-17 |
| ஹிருத்யம் (பத்ராதிபர்) | 17-22 |

OFFICE OF THE REGISTRAR OF ... DEC 1942 MADRAS

| சந்தா விகிதம். | விளம்பர விகிதம். |
|---|---|
| வருஷ சந்தா:— | மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8 |
| உள் நாட்டுக்கு ரூ. 2 | „ „ ½-க்கு ரூ 4 |
| வெளிநாட்டுக்கு ரூ. 3 | „ „ ¼-க்கு ரூ 2 |

கிடைக்குமிடம்:—

**Pandit, S. NARAYANA IYENGAR.**
**Editor and Publisher**
No. 2, Police Station West Lane, Madura.

[விலை **0—3—0**

...ஸ்வர் பிரஸ், மதுரை—42.

JL
L: 5m211, M2sc
N42.4.12.
210214

## வைத்தியச் செய்திகள்.

திருச்சி ஆயுர்வேதஸபா மேற்படி ஸபாவின் மாதாந்தக்கூட்டம் 25—11—42உ மாலை 5-30-மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டிடத்தில் நடைபெற்றது. ஸ்ரீமான் P. G. கணபதி சாஸ்திரிகள் தலைமை வகித்தார்கள் "ஆத்மானம்" என்பது பற்றி சர்ச்சை நடந்தது. மாலை 7-30-மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுற்றது. மெம்பர்கள் எல்லோரும் ஆஜராக இருந்தார்கள்.

V. R. Subrahmania Ayyar,
காரியதரிசி.

---

மதுரை சுதேசவைத்திய ஸபா:—மேற்படி சபையின் ஆதரவில் 7—11—42உ சனியன்றுபகல் 4-மணிக்குகாக் காத்தோப்புத்தெரு சூரியநாராயண சாஸ்திரியார் பாடசாலையில் அட்வகேட் ஸ்ரீமான் N. S. விசுவநாதய்யர் அவர்கள் தலைமையில் தந்வந்தரி பூஜை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அச்சமயம் டாக்டர் T. S. சுப்பிரமண்யம் அவர்கள் தந்வந்தரியின் பெருமை என்பது பற்றி விரிவாக உபந்யாசம் செய்தார்கள். சபையினருக்குச் சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்று கூட்டம் இனிது முடிவுற்றது. காரியதரிசி.

## ஓர் அறிக்கை.

சந்திரிகையில் வியாசம் எழுதியனுப்ப விரும்புவர்கள் தயவு செய்து தங்கள் வியாசத்தை பிரதி ஆங்கிலமாதம் 20 அல்லது 21 தேதிகளுக்குள் நமது கைக்குக் கிடைக்குமாறு அனுப்பவேண்டுகிறோம். அந்த வியாசங்கள் உடனே வெளிவர ஹேதுவாகும். ஏனெனில் 20 அல்லது 21 தேதிகளுக்குள் சந்திரிகை பூர்த்தியாகி விடுகிறது. அதற்குமேல் கிடைக்கும் வியாசங்கள் அடுத்த மாசத்தில்தான் வெளிவரும். ஆகவே ஈரோடு டாக்டர் V. அச்சுதன் நாயர் அவர்கள் அனுப்பியுள்ள வியாசம் 28உ நமது கைக்குவந்ததால் இம்மாதத்தில் வெளியிட முடியவில்லை. ஆகவே அடுத்த மாதமாகிய ஜனவரியில் அது வெளிவரும்.

பத்திராதிபர்.

श्रीधन्वन्तरये नमः

# ஸ்ரீ தந்வந்தரியின் பெருமை.

மதுரை டாக்டர் T. S. சுப்பிரமணியம் அவர்கள்.

**नमामि धन्वन्तरिमादिदेवं सुरासुरैर्वन्दित पादपद्मम् ।**
**लोकेजरारुग्भय मृत्युनाशं दातारमीशं विविधौषधीनां ॥**

(1942௵ நவம்பர்௴ 7௳ சனிக்கிழமை சுதேசவைத்யசபையில் ஸ்ரீ தந்வந்தரி ஜயந்தி கொண்டாட்டத்தில் ஸ்ரீமான் ஆயுர்வேத வைத்யர் T. S. சுப்ரமண்யம் அவர்கள் செய்த உபந்யாசம்.)

அக்ராசனாதிபதியவர்களே சபையோர்களே இன்றையதினம் ஸ்ரீ தந்வந்தரி ஜயந்தி கொண்டாட்டத்தில் ஸ்ரீ தந்வந்தரியின் பெருமை என்ற விஷயத்தைப்பற்றி உபந்யாசம் செய்வதற்கரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது, அதில் ஏதோ என் சிற்றறிவுக்கெட்டியபடி உபந்யாசம் செய்ய விரும்புகிறேன். அதிலுள்ள குற்றங்களை நீக்கி குணங்களைமட்டும் கிரஹித்துக்கொள்ளும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

தேவாசுரர்கள் அமிர்தத்தை முன்னிட்டு பாற்கடலை கடையும் சமயத்தில் அமிருதகலசத்துடன் ஸ்ரீ தந்வந்தரி பிரசன்னமானார் என்று புராணங்கள் கூறுகின்றன அமிருத பானத்தால் தேவர்கள் அமிருதத்வத்தை அடைந்தார்கள். தமிழ் நூல்களில்:—

1. கானலாம்இன்னமொரு மார்க்கம் சொல்வேன்.காசினியில் தந்வந்தரியென்றசித்து நீளவே திரேதாயுகத்திலப்பா நீடான விஷ்ணுவவதாரம் கொண்ட பூணவே தந்வந்தரியான சித்து புகழான மகாவிஷ்ணு அவதாரத்தால் வேணவே மேதினியில் சித்துமாகி வேதாந்த தந்வந்தரியென்னலாச்சே.

2. என்னவே தந்வந்தரி என்ற சித்து யெழிலாக காயாதி கற்பங்கொண்டு தென்பொதிகைதனில் சென்று மேருதன்னில் தேற்றமுடனகத்தியனார் . தன்னைக்கண்டு. வெண்பான சாஸ்திரங்களிலுள்ளாராய்ந்து அவர்மீதில் பக்ஷம்வைத்தன்பு கூர்ந்து சொன்னமொழி தப்பாமல் நயங்கள்பேசி சூக்ஷ்மாதி சூக்ஷ்மமெல்லாமறிந்தார்தானே.

[illegible] அகத்தியனார் செய்தநூல்கள் அகண்டமென்னும் பெருங் கடலுக்கொப்பதாகும். முறியாமல் தன்வந்தரி செய்தநூலை மூன்று லக்ஷங்கிரந்தமென வகுக்கலாகும். சரியொத்த நூல்களுமே பாடிவைத்தார் சரியாக வகத்தியருமதுபோற் சொன்னார், தெரிய வேலோகாதி மாண்பருக்குத் தேற்றமுடன் பாடிவைத்தார் நூல்கள் தாமே.

4. பாடிவைத்த மூன்று லக்ஷங்கிரந்தந்தன்னை வெகுகோடி சித்தர் தாமும் நாடியே மிகப்பார்த்துக் கண்டாராய்ந்து நல முடனே பதினெண்பேர் சித்தரெல்லாம் கூடியே வெகு நூல்கள் செய்தார் பாரு. குவலயத்தில் எவராலும் சொல்லப்போமோ தேடியே தன்வந்தரி பகவான் தானும் சமாதிக்கேக வெண்ணினாரே.

5. எண்ணினார் காயாதி கற்பங்கொண்டுளமிலாகத் தாமிருந்தார் உலகுதன்னில் கண்ணமுடன் சிஷவர்க்கம் அநேகம் பேர்கள் நாடினார் தன்வந்தரி பகவான்றன்னை வன்னமுடன் வெதகாலமிருந்த சித்து வளமையுடன் சதுராதி மார்க்கமெல்லாம் கண்ணபிரான் தானறிந்த சொரூபசித்து காசினியிலவர்போலச் சொல்லப்போமோ என்று இவர் மஹிமையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது வடமொழி வைத்தியத்தில் ஏழு கிரந்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அக்னிவேசர், பேடர், ஹாரிதர், க்ஷாரபாணி, பாராசரர், ஜதூகர்ணர், சுசுருதர் என ஏழு மகரிஷிகள் தனித்தனி கிரந்தங்கள் செய்தனர் இவ்வேழு நூல்களே முதல் நூல்களாகக் கருதப்பட்டிருக்கின்றன. இவைகளைத்தவிர இன்னும் இருபத்தேழுசித்தர்கள்லோஹங்கள் விஷபமாகவும் பாஷாணங்களைப்பற்றியும் எழுதியிருக்கின்றனர் நிமிச்சக்ரவர்த்தி கண்வைத்யத்தைப் பற்றியும் எழுதியிருக்கின்றனர். இவர் ஜனகராஜாவின் வம்சத்தின் ஆதி புருஷர். ராவணன் நாடி சாஸ்திரத்தையும் கச்யபர் விஷவைத்யத்தில் முதல் நூலையும் செய்தார்கள் முன் சொன்ன ஏழு சம்ஹிதைகளுடன்மற்றவைகளும் முதல்நூல்களாக விருந்தனவென்பதற்குப் பல ஆதாரங்கள் காட்டக் கூடும். வாக்படர் செய்துள்ள அஷ்டாங்க ஸங்கிரஹத்தில்

"पुरस्कृत्य पुनर्वसुं धन्वन्तरि भरद्वाज निमिकाश्यप कश्यपाः।
महर्षयोमहात्मानस्तथा लम्पायनादयः॥

புனர்வசு என்ற மகரிஷியை முன்னிட்டுக்கொண்டு ஏழு ரிஷிகளும் லம்பாயனர் முதலிய பெரியோர்களும் தேவேந்திரனிடம் வைத்யம் கற்றுக்கொண்டனர். புனர்வசு என்பவருக்கு ஆத்ரேயர் என்று மற்றொரு பெயருண்டு. இவருடைய சீடர்கள் ஆறுபேர்கள். சிலர் பாரத்வாஜருடைய சிஷ்யர் புனர்வசு என்று புத்தகம் எழுதியிருக்கின்றனர் இது தவறு. ஆத்ரேயரே எல்லோருக்கும் முந்தினவரென்று ஒவ்வொரு அத்யாயத்திலும் வற்புறுத்திவாக்படர் கூறியிருக்கின்றனர்.

ஸ்ரீ தந்வந்தரி சுசுருதரின் குரு:—சுசுருதர் தானாக புத்தகங்களைப் படித்துத் தெரிந்துகொள்ளவில்லை. குருவினிடமே கற்றுக்கொண்டார். தந்வந்தரி திவோதாசன் என்ற பெயருடன் பூலோகத்திலவதரித்து காசிராஜாவாக இருந்தார். அவரிடம் சுசுருதர் முதலிய சீடர்கள் வைத்ய முறைகளைக் கற்றுக்கொண்டனர். திவோதாசர் பூர்ணஞானம் பெற்றதுடன் ஓர் பெரிய அரசராகவுமிருந்ததால் தன் அறிவை விரிவுபடுத்தவும் மற்ற சீடர்களுக்குத் தக்கவிதமாகப்பயிற்சி கொடுக்கவும் சுலபமாக விருந்தது திவோதாசர் உண்மையில் தந்வந்தரியின் அவதாரம் தானா என்பதைப்பற்றி ஆராயப்போவதில்லை. தான் தந்வந்தரியின் அவதாரமென பல தடவைகளில் அவரே சொல்லியிருக்கிறார் என்பது தவிர ஆதாரம் ஏதும் கிடைக்கவில்லை. வைத்ய விஷயத்தில் மிகுந்த நிபுணத்வம் பெற்றிருந்தமையால் ஜனங்கள் அவரை ஓர் அவதார புருஷரெனக் கொண்டாடியிருக்கக் கூடும் என்பதையும் நாம் சொல்லக்கூடும். திவோதாசர் காசிதேசத்தை அரசாண்ட சமயத்தில் காசியிலேயே சுசுருதர் முதலியவர்கள் வித்தையைக் கற்றுக்கொண்டார்களெனத் தெரிகிறது.

சுசுருதர்:—இவர் க்ஷத்திரியவம்சத்தைச்சேர்ந்தவர். அதிலும் ராமாயணப் பிரசித்தமான விசுவாமித்திருடைய நூறு பிள்ளைகளிலொருவரெனத் தெரிகின்றது. சுசுருத ஸம்ஹிதையில்

विश्वामित्रसुतः श्रीमान् सुश्रुतः परिपृच्छति ।

விசுவாமித்திருடைய புத்ரரான சுசுருதர்கேழ்க்கிறார் என்றுசொல்லப்பட்டிருக்கிறது. வியாசர் எழுதிய மகாபாரதத்தில் அநுசாசன பர்வத்தில் விசுவாமித்திருடைய குமாரர்கள்எல்லோரையும்வரிசை

யாகச்சொல்லும்பொழுது சுசுருதரையும் அவருடைய குமாரனைச் சொல்லப்பட்டிருக்கிறது. சுமார் 800 வருஷங்களுக்குமுன் இருந்த மகாகவிராஜசேகரன் என்பவர் "பாலராமாயணம்" என்ற ஓர்நாடகம் இயற்றியுள்ளார். அதில் ராமனுடைய சரித்ரம் நாடக முறையில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. நாடகங்களில் ரஸபாகத்தை அதிகப் படுத்துவதற்காக சில கல்பனைகள் செய்வது கவிகளின் வாடிக்கை. சீதையின் காலத்தில் ராவணன் பலிசக்ரவர்த்தி நரகாசுரன் சுசுருதர் முதலியவர்கள் இருந்ததாகப் புராணங்களில் தெரியவருகிறது. இவர்கள் சீதையை விவாகம் செய்துகொள்ள ஏன் முன்வரவில்லை என ஓர் சங்கை உதிக்கின்றது. இவர்கள் சீதையை மணக்க முயற்சித்த தாக வால்மீகி ராமாயணத்தில் சொல்லப்படவில்லை. சீதை என்ற ஓர் கன்னிகை இருப்பதாக ராவணன் முதலியவர்களுக்குத்தெரிய வில்லை என்பது ஒப்புக்கொள்ள முடியாத விஷயம் தெரிந்தும் அவர்கள் உபேக்ஷித்தார் என்பதும் நியாயமில்லை. ஆகையால் இந்த பாகத்தை சில கவிகள் தங்கள் நாடகங்களில்சாதுர்யமாகஸமர்த்தித் திருக்கின்றனர். பால ராமாயணத்தில் சீதையைதனக்கு கொடுக்கும் படி ஜனகனுக்கு ராவணன் தூதுவிட்டதாகவும் ஆனால் அச்சமயத் தில் சீதையை ராமனுக்கு மணம் முடித்துவிட்டதாகவும் இதை திடீரென ராவணனுக்குத் தெரிவித்தால் என்ன நேரிடுமோவென அஞ்சி ராவணனுடைய மந்திரிகள் எவ்விதத்திலும் விஷயத்தை ராவணனுக்கு அறிவிக்கத் தீர்மானித்து அதற்காக ஓர் தந்திரம் செய்ததாகவும் அதாவது "சீதாசுயம்வரம்" என்ற ஒரு நாடகத்தை ராவணனுக்கு முன்னால் நடத்தி அதன்மூலம் உண்மையை விளக்கி விட நினைத்து அவ்விதமே ராவணன்முன்னிலையில்நாடகத்தைநடித்த தாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதில் சீதையை விவாகம் செய்துகொள்ள விரும்பி பல தேசத்து அரசர்களும் கூடியிருக்கும் சபையில் ஜனகராஜன் தோன்றிசிவனுடையவில்லைமுறிப்பவருக்குச் சீதையை விவாகம் செய்துகொடுப்பதாகச் சொன்னார். உடனே பலர் ஒவ்வொருவராக வில்லைக் வளைக்க முயற்சித்து வருகையில் சுசுருதர் எழுந்து வில்லை கையிலெடுத்து அதன்பளுவால்மூர்ச்சித்து விழுந்த உடனே வேடிக்கை பார்க்கும் ராவணன் भिषज्यतु भवान् "வைத்யராகிய நீர் வைத்யத்தொழில் பாரும்" என்று பரிகாசம்

செய்ததாக சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக்கதாபாகம் கவியின் கற்பனை என்பது வாஸ்தவமே யானாலும் விசுவாமித்ரர் குமாரர் சுசுருதர் என்பதில் ராஜசேகராருடைய சம்மதத்தைக் காட்டவே சொன்னோம். இவர் எந்த ராஜபத்தை ஆண்டார் என்பதும் இவருடைய ஜீவிய சரித்திரமும் ஊகிக்கமுடியவில்லை. அவ்விதமே காலத்தையும் ஊகிக்கலாமே யன்றி நிர்ணயமாகச் சொல்லமுடியவில்லை. சுசுருத ஸம்ஹிதையே தந்வந்தரி நூலெனக் கூறலாம். தந்வந்தரி உபதேசத்தையே லோகோபகாரார்த்தமாக சுசுருதர் ஓர் நூலாகத்தொகுத்தமையால் தந்வந்தரியின் அபிப்பிராயமே இந்நூலில் பிரதிபலித்திருப்பதால் இதை தந்வந்தரி நூலெனக் கொள்வதில் தடையில்லை. இதைத்தவிர தந்வந்தரி தனித்து ஓர் நூல் எந்த பாஷையிலும் தொகுத்ததாக தெரியவில்லை. தந்வந்தரி தனி நூல் செய்திருந்தால் அதுவே முதல் நூலாகவும் மற்றவை வழி நூலாகவும் சொல்லப்படவேண்டும். ஆகையால் தந்வந்தரி செய்ததாக வெளிவந்துள்ள ஒரு வைத்ய நூல் யாரோ ஒருவரால் எழுதப்பட்டதே யன்றி முற்கூறிய தந்வந்தரி தேவனால் எழுதப்பட்டதல்ல. சுசுருதரும் அவரின்குருவாகிய திவோதாசர் என்ற தந்வந்தரியும் க்ஷத்திரிய வம்சத்தினரானது பற்றி அவர்கள்சஸ்திர சிகித்சையை உலகினில் பரவச்செய்தது மிகவும்உசிதமே திவோதாசருக்கு பல சிஷ்யர்கள் இருந்தபோதிலும் சுசுருதரே முதல்வராக விளங்கினர். ஆத்ரேயர் சிஷ்யரில் அக்னிவேசர் முதன்மை பெற்றதுபோல இவரும் தந்வந்தரிசிஷ்யர்களில்முதன்மை பெற்றார்.

சுசுருதரின் பெருமை:—சரகம் போன்ற பல நூல்கள் சிகித்சா முறையைப் பற்றி விரிவாகக் கூறுகின்றன. அவ்விஷயங்களில் சுசுருத ஸம்ஹிதை பெருமை யடைய முடியாவிட்டாலும் சஸ்திர சிகித்சை விஷயத்தில் ஒப்புயர்வற்றதென்பதை ஆக்ஷேபிக்க முடியாது. தத்கால ஆங்கில வைத்யத்தைப்போல 'சவ பரீக்ஷை' அதாவது பிணத்தை அறுத்துப்பார்க்கும் விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. சரீரத்தில் இரத்த ஓட்டம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. ஹிருதயமும் அதன் தொழிலும் கூறப்பட்டிருக்கிறது. சரீரத்தின் மர்ம நிலைகளென்று 107 ஸ்தானங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன

(Hernia) என்ற குடல்வாதம் முதலியவைகளில் ஆயுதம் உபயோகிக்கும் விதங்களும் வயிற்றிலே மரித்த சிசுக்களை வெளிப்படுத்தும் விஷயமும் கண்களில் காணும் படலம் முதலிய வியாதிகளை சஸ்திர சிகித்சையால் குணப்படுத்த வழிகளும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. சுருக்கமாகக் கூறுங்கால் தத்காலம் ஆங்கிலத்தில் கையாளப்படும் சஸ்திர சிகித்சை நமது முன்னோர்களுக்குப் புதிதல்லவென்பது வியக்தமாகின்றது. பெரிய சஸ்திர சிகித்சை காலங்களில் நோயாளிக்கு மயக்கமுண்டாக உள்ளுக்கு மருந்துகள் உபயோகிக்கப்பட்டு வந்தன. சுசுருத ஸம்ஹிதையில் காணப்படும் பல ஆயுதங்கள் தத்காலம் ஆங்கில முறையில் உபயோகிக்கப்படுகின்றன. இவ்வளவு விஸ்தாரமாக உபயோகத்திலிருந்த சஸ்திர சிகித்சை தற்காலம் நமக்கு அருமையாகிவிட்டது. இந்தியாவில் ஆதியிலிருந்த பலகலைகள் தத்காலம் மங்கிவிட்டன போலவே வைத்திய முறைகளும் மங்கிவிட்டன. அதன்காரணங்களை நாமிங்கு ஆராயப்போவதில்லை. அந்நிய நாட்டினரின் தொந்திரவுக்குள்ளாகிய வடதேசத்தில் கலைகள் க்ஷீணித்ததற்குக் காரணமிருந்தபோதிலும் தென்னாட்டில் அதற்குப்போதிய காரணம் கூற வழியில்லை. சுசுருத ஸம்ஹிதைக்குப் பல பெரியோர்கள் பல உரைகளை எழுதியிருக்கின்றனர் அவற்றுள் பல நசித்துவிட்டன. சில தத்காலம் படிக்கப்பட்டுவருகின்றன.

இத்துடன் என் சிறிய உபந்யாசத்தை முடித்துக்கொள்கிறேன்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्यायेन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं लोकाः समस्ताः सुखिनो भवन्तु ॥

மற்றும் பற்பலஸன்னிபாத லக்ஷணங்கள் தென்படுகின்றன. 3 முதல் நான்கு வாரங்கள் வரையில் கெடுவுநாட்களாகும். அதிக விவரங்களை ஆதாரக்ரந்தங்களில் பார்ப்பது முறையாகும். ஆந்திரகலாமசோதம் விருக்கசோதம், ஹ்ருதயாவ ரோதம் சய்யாவிரணம் முதலியன உபத்திரவங்களாகும். ஆராய்ச்சியில் ஸன்னிபாதாந்தரமாகக்கூடும்.

ஸூதிகாசுரம்:—பிரஸவமான பெண்களுக்கு (உடனடி நாட்களில்) உண்டாகிக்காணும் சுரத்தைக் குறிப்பது இதுவே. "மித்யோபசாராத் ஸங்க்லேதாத்" என்னும் உபதேசப்படி இக்கெடுதல்கள் ஏற்படுகின்றன. உடம்பு வலி, சுரம், தாஹ வாக்ஷி நிரோகநடுக்கம், நிரோக கனதி, வலி, வயிற்றுப்போக்கு முதலியன கோளாறுகளின் குறிப்புகளாகும். யோநி கர்பாசயங்களின்வீக்கம், பழுப்பு அழுகின துர்கந்தம், யோநிஸ்ராவம், பலக்குறைவு, தூக்கமின்மை முதலியன இதன் உபத்திரவங்களாகும். விஞ்ஞானிகள் இதைப் பூச்சிகளினு லேற்படுவதாய்க் கண்டுள்ளார்கள். அவ்வறிவுகளை அவரவர்கள் உறுதிப்படுத்திக்கொள்ள ரோகிகளின் மலமூத்திராதிகளை அணுவீக்ஷண யந்திரத்வாராசெய்து கொள்ள நிர்பந்தித்துள்ளார்கள் ஷை பரீக்ஷையின்மூலம் ஷை அணுக்களை கண்டறிந்து தகுந்த பரிஹாரங்களளிக்கப்படக் காரணமேற்படுகின்றது. நவீன முறைகளிலுள்ள இவ்வசதி மற்றெம் முறைகளிலு மிருப்பதற்கில்லை யென்பது வெறும்கனவாகும். பண்டேகாலத்து ருஷிகளும் இவ்விஷயங்களை உள்ளங்கைநெல்லிக்கனி போல் பூராவும் விளங்கி விஸ்தார பயத்தினால் ஸூத்திர ரூபத்தில் தான் போதித்துள்ளார்கள். அதிகமாகக் குறிப்பது இங்கு உசிதமன்றென்று நினைக்கிறேன். இச்சூதிகா ஜ்வரத்தையும் பலவிதமாக வகுத்துள்ளார்கள்.

மூளைஜ்வரம்:—நம் வைத்திய கிரந்தங்களில் இவ்விஷயத்தைக் கவனித்திருக்கிறார்களில்லை யென்று பலர் கூறுகின்றனர். கிரந்தங்களை ஸூக்ஷ்மமாக ஆராயின் திரிதோஷங்களின் அதிக மத்திய ஹீனத்தன்மையினால் ஓர்வித விளைவே யிது என்று விளங்கும். இதில் கடுமையான தலைவலி, பிரட்டல், வாந்தி, 101 டிக்ரிவரையில்

சுரம், நாடியின் சஞ்சலம், மயக்கம், பிதற்றல், கண், காதுகளின் கொள்கைக்கெடுதல் முதலியன் காணும். ஸ்தான காரண பேதங்களினால் இதற்கும் பிரிவினைகள் சொல்லப்பட்டுள்ளன. ஒரு வார கெடுவு இதற்குச் சொல்லப்படுகிறது.

ச்வஸனகஜ்வரம் —ஸாதாரணமாக நீர் சுரம், முறை சுரம் இருமல் முதலிய தொந்தரவுகள் ஏற்பட்டு கவனியாது மித்யோபசாரங்களைச் செய்வதால் இந்நோயுண்டாகிறது. நுரை யீரல், சுவாஸக்குழாய் ஆவரணகலை முதலிய விடங்களில் சோதமேற்படுவதால் பல தொந்தரவுகளுடன் காணும் சுரத்திற்கு இப் பெயர் இச்சுரம் ஆரம்பிக்குமுன் குளிர் கண்டு சுரமாரம்பித்து 105 டிக்கிரி வரையில் அதிகரிக்கும். தண்ணீர் தாகம், அரோசகம், நெஞ்சுவலி, விசேஷமாக எந்தப்பக்க நுரையீரல் பாதிக்கப்படுகிறதோ அந்தப்பக்கம் அதிகவலி, வீக்கம், (அல்லது இரண்டு பக்கமும்) இருமல் ரத்தத்துடன் கபம் வெளிப்படுதல், மூக்கடைப்பு, இளைப்பு, வியர்வை, தொண்டையில் கபம் பேசுதல், நாக்கில் முள்ளுத்தன்மை பலக்குறைவு, பிதற்றல் முதலியன லக்ஷணங்களாகும். இதன் மரியாதை 9 நாட்கள் வரையில் என்று கூறப்படுகிறது. இது கிருச்ர ஸாத்யமாகும். நவீன முறைகளில் இவ்வியாதியும் ஓர்வித ஜீவாணுக்களாலுண்டாவதாகக் கண்டறிந்துள்ளார்கள். இதைப் போலவே ஆமவாதஜ்வரம் ரோமாந்திகம், க்ரந்திகம்ஸம்ஸிருஷ்டம், ஸைகத மாக்ஷிகஜ்வரம் போன்றவைகளும் ஆசார்யானுகூல்யத்தையொட்டியே கூறப்பட்டிருக்கின்றன வென்பது திண்ணமே. சுரம் மிருதமாக எல்லா சிக்குகளிலும் மித்தியோ பிந்தியோ மத்தியிலோ வரக்கூடியதாக விருப்பதால் நம் வைத்தியத்தில் ஸ்வதந்திரத்திற்கே ப்ராதான்யமல்லாது பாதந்திரத்திற்குப்ராதான்யம்கிடையாததலால் ஷெடி சுரங்களைக் குறிப்பிடவில்லை. "ஸம்க்ஷேபத: க்ரியாயோகோ நிதான பரிவர்ஜனம் என்றும் எவ்வியாதிகளைப்போல் சுரத்திற்கும் பரிஹாரம் போதிக்கப்பட்டிருப்பதால் அந்தந்த அவஸரங்களில் கூறியிருப்பன வியாதிகளை உண்டாக விடாமலோ வளுக்கவிடாமலோ எச்சரிக்கை செய்யவேண்டும் தடுக்குமுறைகளாகையால் இச்சாஸ்திரங்களைப்போல் சுகாதார முறைகளைப் போதிக்கும் மறு சாஸ்திரம் கிடையாதென்று ஏற்கனவே கூறியிருப்பது உண்மை

பெறலாயிற்று. இதன் பரிஹார முறைகளில முதலாவதாய் "ஜ்வரேலங்கனமேவாதௌ" என்று கூறப்பட்டிருக்கிறபடிகவனித்தல் வேண்டும். அதாவது ஜொரத்தில் (ஆமாவஸ்தையில்—தருண ஜ்வரத்தில்) லங்கனம் பட்டினி போடுதல்தான் அனுஷ்டிக்கப்பட வேண்டும். ஆனால் பொதுவாக ஜொராரம்பத்தில் சுரத்தின் வேற்றுமைகளைக் கண்டறிய அதிகக் கஷ்டமாக விருப்பதால் முதலாவதாக சுர ஸாமான்யப் பரிஹாரங்களுக்குப் பொருந்தும் விஷயங்களேயாகும் இவைகள். இந்நாட்களில், பகல் தூக்கம், ஸ்நானம், அப்யங்கம், மைதுனம், கோபம், காற்றில் திரிதல், தேகப் பயிற்சி, துவர்ப்பு வஸ்துக்களின் உபயோகங்கள் கூடாது. இவ் விதம் செய்யப்படும் உபவாஸத்தினால் ஆமக்கெடுதல் விலகிதோஷங்கள் பக்வமடைந்து சமனமடைய சீக்கிரத்தில் வழியேற்படும். தீபனகரமாக விருப்பதால். மேலும் சுரத்தில் உஷ்ணமேற்படுவது அதிகக்கெடுதலுக்காகுமாதலால் ஸ்நானமிங்கு நிஷித்தம் இதுபோலவே அப்யங்காநு லேபனங்களும் விலக்கப்பட்டவைகள். விபாபாமாதிகளும் சுரவிருத்தி காங்களே. மேலும் மயக்கம் முதல் மரணம் வரைக்கும் கொண்டுவிடும். வாயுஸேவனம் ஸ்வேதாதி நிக்ரஹமாதலால் சுரவிருத்திகரமாகும். தருணவஸ்தையில் செய்துகொள்ளும் லங்கனத்தினால் ஆமதோஷம் விலகாவிடில் பாசனீயங்களான ஷடங்காதி கஷாயங்களை உபயோகப்படுத்தவும். அதி மாத்ரோபயோகத்தினால் மறுபடியும் அஜீர்ணத்தன்மைஏற்படுமளவில் கஷாயத்தை உட்கொள்வது விரும்பத்தக்கதல்ல. இக் கஷாயங்கள் தோஷஹிதகாரிகளாகவே யிருத்தலவச்யம். (பாசனம் சமனீயம் வாகஷாயம் பாயயேதனு) தோஷாமங்களின்பக்வமேற்படாது பித்தக்கோளாறுகளினால் ஏற்படும் தண்ணீர் தாகத்தில் குளிர்ந்த ஜலத்தின் உபயோகம் ஆயுர்வேத முறைப்படி சிகிச்சையாகாது, அவ்வித சந்தர்ப்பங்களில் ஷடங்கபானமோ சிருதசீத ஜலமோதான் உபயோகப்படுத்தப்படுகின்றது. விபரீதமாக ஸாமாவஸ்தையில் கவனியாது தாக எரிச்சல்களை விலக்கிக்கொள்ள குளிர்ந்த ஜலம் முதலியவைகளின் பிரயோகம் சுரத்தை வலுப்படுத்தி ஆந்திரிகா சேஷ்பக ச்வஸனகஜ்வரங்களில் கொண்டுவிட ஹேதுவாகின்றது. இதுபோலவே சுர குணதோஷ விசார

மின்றிக் கடைகளில் ஸுலபமாய்க்கிடைக்கும் சுரசமன மருந்து களின் உபயோகமும் தோஷ கோபங்களை வலுக்கச்செய்துகடுமைத் தன்மைகளை ஏற்படுத்தி விடுகின்றது. ஆகையால் நன்கு கவனித்து "கோரைக்கிழங்கு, சந்தனம், சுக்கு, வெட்டிவேர், பர்பாடகம், விலாமிச்சவேர் இதுகளால் தயாரித்த கஷாயத்தை தினராத்திரிகளில் இரண்டு மூன்றுதடவைகளிலுபயோகப்படுத்துவது பாசனம், தாஹசமனம், சுரசமனமுமாகும். மற்றும் தகுதியான கஷாயங்களும் பாண்டங்களும் இத்தருணாவஸ்தையில் அல்ப மாத்திரையில் கொடுத்துவருவதும் தடுக்கப்பட்டவைகளல்ல வாயினும் நவீனமுறைகளைப்போல் இத்தருணத்தில் பாலின் உபயோகம் நிஷித்தமாகும். அதன் உபயோகம் ஆமத்தைப் பலப்படுத்துவதால் அதிகத்தொந்தரவுகளுக்குள்ளாக்கும். மற்ற வைத்திய நூல்களில் காணக்கிடைக்காத சுரத்தைப் பொறுத்தமட்டில் நம் வைத்யத்தில் ஜலவிஷய விசாரங்கள் அதிக சிலாக்கியமாக விருக்கின்றன. பொது வாக ஸாதாரண ஜொரம் ஆமஜொரம், கபஜொரம், வாதஜொரம், இதுகளின் தொந்தங்களில் குளிர்ந்த ஜலம் மறுக்கப்பட்டுள்ளது. காரணம் சுர நிலமையில் அக்னிபலம் குறைவாக விருப்பதால் குளிர்ந்த ஜலம் மறுபடியும் அக்னி பலத்தைக்குறைக்குமல்லவா தன்னிமித்தம் அதிக தோஷ விஷமதைக்கு வழி ஏற்படுகிறது. தவிரவும் சுரத்தோடு இருமல், இளைப்பு, நீரேகவலி, ஜலதோஷம் முதலிய தொந்தரவுகளோடிருப்பின் அறவே சீதஜலம் நிஷித்தம் இதனால் அவசியப்படின் உஷ்ணஜலத்தை உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்று விளக்கமாகின்றது. நாம மாத்திரத்தில் ஏற்படுத்தும் உஷ்ணோதகமும் நிஷித்தமாகும் முறைப்படியான உஷ்ணோதகம் (க்வாத்யமானந்து நிர்வேகம்......ஆர்தாவசிஷ்டம்..... உஷ்ணோதக முச்யதே) என்றபடி மெதுவாக எரித்து பாதிகாணவைத்த ஜலத்தைத்தான் இங்கு உஷ்ணோதகமாகக் கூறப்படுவது) சுரம், காஸம், கபம், ச்வாஸம், பித்தம் வாதம், ஆமம், மேதஸ் களைக்குறைக்கும் பாசனமுமாகும் என்று கூறியுள்ளார்கள். சுசுருதத்தில் "தத்பாதஹீனம்......" கால்பங்கு சுண்டவைத்த ஜலம் வாதஹரமென்றும் அரைப்பங்கு பித்தஹரமென்றும் மூன்றுபங்கு சுண்டவைத்தது கபஹரமென்றும் உஷ்ணோதக குணத்தைக் கூறி

யுள்ளார். சுர தோஷாதிக்யத்தை முன்னிட்டு மூலிகைகளினால் தயாரித்த இவ்வித உஷ்ணோதகம் அதிக நன்மையைக் கொடுக்க வல்லதென்று திருப்பச்சொல்லத் தேவையில்லை. ரோகியின் அத்தியாவச்யமான தள்ளமுடியாத தண்ணீர் தேவையை கொஞ்சம் கொஞ்சமாக உஷ்ணோதகத்தினால் பூர்த்திசெய்து கொள்வது நியாயமாகும். பானீயம் ப்ராணதாரணம் என்ற உபதேசத்தை முன்னிட்டு குறைந்த அளவுகளாகத்தான் கொடுக்கல் வேண்டும். "திவாச்ருதம் ச யத்தோயம்..........."என்ற விதிப்படி காலையில் தயாரித்த உஷ்ணோதகம் இரவில் கெடுதலை யடைகின்றது. இரவில் தயாரித்தது காலையில் கெடுதலாம் என்பதை நன்கு உணரவேண்டும். மேலும் ஒருதரம் தயாரித்த உஷ்ண ஜலம் மறுதரம் சுடவைப்பின் விஷத்தன்மைப்படு மென்பதையு மறியவேண்டும் (மத மூர்சாதிகளில் சீதோதகத்தின் உபயோகமே விரும்பத்தக்கது) சுரத்தின் தருணவஸ்தையில் விரேசன விதி தடுக்கப்பட்டுள்ளது. இவ்வவஸ்தையில் வாத கபங்களின் ஆதிக்யம், வலி முதலிய வேற்பட்டு மலபந்தக் கெடுதலிருப்பின் மிருதுவான முறையில் மலத்தை வெளிப்படுத்துவது அனுகூலமாகும். முன் குறிப்பிட்ட லங்கன விஷயத்தில் தோஷங்களின் அல்ப மத்திம அதிகக்கோபங்களைக் கண்டறிந்து லங்கனர், லங்கன பாசனம் சோதனமென்றும் முறைகளைக் கைக்கொள்ள வேண்டியதென்றே "த்ரிவிதம் த்ரிவிதே தோஷே" .....என்று உபதேசிக்கப்பட்டுள்ளது. வமனம், விரேசனம், வஸ்தி, (சிரோவஸ்தி) ரத்தமோக்ஷம், தாஹத்தடை, மாருதாதப ஸேவனம் வியாயாமம்பாசனக்கிரியைகள் உபவாஸம் ஆகியவைகள் லங்கன முறையில் பெற்றவைகள். இதுகளை யதோசிதம் புத்திபூர்வமாக தோஷாதிக்கங்களில் ப்ரயோகப்படுத்த வேண்டும் அதாவது கபஸ்தானத்தில் வமனம் பித்தாதிகத்தில் விரேசனம் வாதாதிகத்தில் ஆஸ்தாபனம் (சிரோபாகங்களில் நஸ்யாதிகள்) சாகானுசாரிகளில் ரத்தமோக்ஷணம், கபத்தொந்தரவின் பெருக்கில் தண்ணீர் தடை பித்த கபங்களில் மாருதஸேவனம், வாதகபங்களில் ஆதபஸேவனம் ஸாமநிலைமையில் உபவாஸம் தோஷ பாகத்திற்காக பாசனீயங்கள் அவஸ்தா விசேஷங்களில் வியாயாமம் இவைகள் அவச்யம் அங்கீகாரியங்களே. அனசனரூபமான உபவாஸம்

"கபபித்தே த்ரவே தாது......" என்றபடி கவனித்தல் வேண்டும். நிராமம், வாதஜ்வரம், க்ஷத க்ஷய ஜ்வரங்கள் மானஸிகஜ்வரங்கள் கர்பிணிகள், பாலர்கள், விருத்தர்கள், துர்பலர்கள், பயங்காளிகள், ஊர்த்வவாதமுடைய ஜ்வரரோகிகள் ஆகியவர்கள் லங்கனம் செய்விக்கப்படத் தகுதியற்றவர்களே. கய பித்தங்கள் திருவ ரூபங்களாக விருப்பதால் பட்டினியைப் பொறுக்க வல்லவைகள் ஆமம் விலகினால் வாயு ஒரு க்ஷணமாவது பொறுக்காது (பட்டினியை) என்று கபபித்தே........ என்பதின் பொருளாகும். ஆமதோஷத்தில் மந்தம், மலபந்தம், சோம்பல், குடலிரைச்சல், உடம்புவலி, வீக்கம் சூலம் முதலியனவுண்டாம். இதுகளின்மை நிராமத்தன்மையாகும். உபவாஸத்தின் விபரீதத்தினால் பல கெடுதல்கள் ஏற்படுகின்றமையால் இவ்விஷயத்தில் அதிகக்கவனம் செலுத்தப்படவேண்டியதே. மேற்கூறப்பட்ட உபவாஸத்தினாலோ தீபன பாசனாதிக்வாதோப யோகத்தினாலோ தருணாவஸ்தைக்குள் ஜ்வரம் விலகாவிடில் இதற்கென்று குறிப்பிட்டுள்ள கஷாயங்களை உபயோகப்படுத்தவேண்டும். சூர்ணங்கள், மாத்திரைகள், கல்கங்கள், ஆஸவங்கள், ஸ்வரஸங்கள், பஸ்மசிந்தூரங்கள் வகையறா சுர ஸாமான்ய ஹரங்களாய்க் கூறப்படுகின்றன. மரிசாதி பாசனம். புஷ்பாதி சூர்ணம், நிம்பாதி சூர்ணம், ஜ்வரக்னீவடீ, சுர தூமகேது, ம்ருத்யுஞ்சயரஸம் முதலியவைகள் வாதஜ்வரஹரங்களாயும் தான்யகாதி, பர்படாதிக்வாதங்கள் ஹிமாம்சுரஸம், முக்தாபஸ்மம் முதலியவைகள் பித்தஜ்வரஹரங்களும், மரிசாதிக்வாதம், ம்ருத்யுஞ்சயவடீ, கஸ்தூர்யாதிவடி, நீலகண்ட ரஸம், தாளக பஸ்மம்; வாஸாகண்டகாரியாதிக்வாதம் முதலியன கபஹரங்களும், பஞ்சபத்ராதிக்வாதம், ஸஞ்சீவனீவடீ, ஜ்வரகேஸரி, ப்ரவாளகல்கம் முதலியன வாதபித்தஜ்வரஹரங்களும், தசமூலக்வாதம், தசமூலாரிஷ்டம், ஜ்வராந்தகவடீ முதலியன வாதகபஜ்வரஹரங்களும், நிம்பாதி, வாஸாதிக்வாதங்கள் முதலியன பித்த கபஜ்வரஹரங்களும், கஸ்தூரிபைரவரஸம், ஸின்னேத்பவாதிக்வாதம், ஸித்தப்ராணேச்வரரஸம். காள கூடரஸம், முதலியன ஸன்னிபாத ஹரங்களும், மஹாஜ்ராவங்குச ரஸம், மல்லிவடி, ஜ்வராந்தகாரிஷ்டம் அமிருதாரிஷ்டம் கிராதாரிஷ்டம், பஞ்சவக்த்ரரஸம், பிரதாப லங்கேச்வரம் முதலியன விஷமஜ்வரஹரங்

களும் சிருங்க முக்தாபஸ்மம், அச்வசோளீரஸம், லக்ஷ்மீநாராயண ரஸம் முதலியவை. ஆந்திரிக ஸன்னிபாத ஹரங்களும் பஞ்சகோலக் வாதம், தாளகபஸ்மம், சிருங்கபஸ்மம், கண்டகாரிக்வாதம் உரோப நாஹரங்கள் முதலியன ச்வஸனகஜ்வரஹரங்களும் மாலினீவஸந்தம், ஜயமங்களரஸம், தைல்வககிருதம் முதலியன ஜீர்ண ஜ்வரஹரங் களும்-வடாங்குரகல்கம்; ருத்ராக்ஷகல்கம், பர்படாதிக்வாதம் முதலியன ரோமாந்திக ஹரங்களும், சந்திரவடீ, கிரந்திக ஜ்வரஹரமும் ரோஹீதகாரிஷ்டம்' ப்லீஹாரிலோகம், ப்லீஹாஜ்வரஹரமும், லோகநாதரஸம் யக்ருதரிலேகம் முதலியன யக்ருத ஜ்வரஹரங்களும் ஆகும். மற்றும் கூறப்பட்டுள்ள ஜ்வரங்கள் நிதான பரிவர்ஜனங்களினாலோ தோஷகோபானுஸாரமோ பரிஹாரமளித்தால் அவச்யம் விலகுமென்பதில் ஸந்தேகமே கிடையாது. மேலும் யோசிப்பின் அந்தந்த அவஸ்தானுஸாரம் அனுஸரணையான ஔடதோபயோகம் செய்துகொள்வதே இங்கு உசிதமாக விருக்குமென்று இங்கு எடுத்துக்காட்டுகிறேன். "ரோகமாதௌ பரீக்ஷேத ததோனந்தர மௌஷதம் தத: கர்மபிஷக் பச்சாத் க்ஞான பூர்வம் ஸமாசரேத்" என்ற உபதேசப்படி பார்த்துக்கொள்ளவேண்டும். இனி ஸந்நிபாத சுர சிகித்சையைக் கவனிப்போம். ஸன்னிபாத சுர சிகிச்சையில் மிருத்யுநாஸஹயோத்தல்பம் ஸன்னிபாதம் சிகித்ஸதா" என்ற ஆன்றோர் உபதேசம் அக்ஷரப்படியினும் உண்மையென்று தெரியவரும். அதாவது ஸன்னிபாதஜ்வரத்தைப் பரிஹரிப்பவன் நமனுடன் போராடவேண்டுமெனப் பொருளாகும், யாபி: கிரியாபி. ஜாயந்தேசரீரே.....கர்மதத்பிஷ ஜாம்மதம் என்றும் ஆதேசப்படி எந்தப்பிரயோகத்தினால் சரீரதோஷ தாதுக்கள் ஒழுங்குபடுமோ அவையே வைத்யமாகும். அதுகள்தான் வைத்தியர்களின் லக்ஷியமுமாகும் என்றும் "யாதாதீர்ணம் ஹரேத் ரோகம்" என்றபடி எவ்வேலைகள் உண்டான தொந்திரவுகளை விலக்குவதோடு மறு தொந்திரவுகளை எழுப்பாமலிருக்கின்றனவோ அவைகளே உபசாரங்கள் என்றும் முறைகளை உணர்ந்துபின் "லங்கனம் வாலுகாஸ்வேதோ நஸ்யம் நிஷ்டீவனம் ததா அவலேஹாஞ்சனம் சாபிப்ராக்ப்ரயோஜ்யம் த்ரிதோஷஜே" லங்கனம், ஸ்வேதனம் (சீராவியினால் வியர்க்கச்செய்தல்) நஸ்யம், கவளக்ரஹம், அஞ்சனம் அவலேஹம் (நாக்கில் மருந்து

தடவுதல்) ஆகியவற்றை முதலாவதாகச் செய்துகொண்டால் (ச்லேஷ்ம நிக்ரஹமேவாதௌ குர்(யாத்) ஆமதோஷம் கபக்கோளாறுகள் விலகக் காரணமாகும். லங்கனத்தினால் ஆமதோஷம் நிச்சேஷம் சமனமடையும் அதன்மூலம் தோஷ கதாகதிகளுக்கும் பாசனகாரியத்திற்கும் சுலபதை ஏற்படும். வாலுகா ஸ்வேதத்தினால் ஏற்கனவே சொல்லியிருக்கிறபடி தடைபட்டிருக்கும் ஸ்ரோதஸ்ஸுக்களை திறக்கச்செய்து (வியர்வைரூபமான ஜலாம்சத்தினால் அழுக்குகளைக் கழுவினது போல்) வியர்வையை வெளிக்கிளப்பிவிடுவதால் உஷ்ணத்தன்மையைக் குறைக்க மூலமேற்படும். நஸ்யத்தினால் சிரஸில் கட்டியிருக்கும் கபக்கோளாறுகளான தலைபாரம், தலைவலி, முதலியவை விலகும். மற்றும் பல தொந்தரவுகளும் இதனால் தீரும். கவளக்ரஹத்தினால் ச்வாஸநளிகை, அன்ன நளிகை, புப்புஸம், கண்டம், நாஸி, ஆகியவிடங்களில் கபம்கட்டி காஸச்வாஸாதிகளை உண்டுபண்ணும் தொந்தரவுகளை விலக்க வல்லதாகும். (லீனேப்யா கிருஷ்யதே ச்லேஷ்மா மன்யா கண்டசிரோகளாத்) "ஸன்னிபாதஜ்வரே பூர்வம் கார்யமாம கபாபஹம் பச்சாத் ச்லேஷ்மணி ஸம்க்ஷீணே சமயேத் பித்தமாருதௌ," என்றபடி ஸன்னிபாதத்தில் முதலாவது கபக் கெடுதல்களை விலக்கிப்பின் பித்தக்கோளார்களையும் அடுத்தபடியாக வாத விகாரங்களையும் விலக்குதல் வேண்டும். மற்றும் பல தொந்திரவுகளை அவ்வப்பொழுது தகுந்த உள் வெளிப்பிரயோகங்களினால் பரிஹரித்தல் வேண்டும். இதில் அஸாத்ய லக்ஷணங்கள் காண்பினும் "தாவத் பிரதிக்ரியாகார்யா யாவச்ச்வஸிதி மானவ: கதாசித்தைவயோகேன த்ருஷ்டரிஷ்டோபிஜீவதி" என்றபடி கூடிய மட்டில் பரிஹாரம் கொடுத்துவிடுவதே வைத்யரின் கடமையாகுர். ஸன்னிபாதஜ்வரத்தில் பொது விதிகளை யனுசரிப்பதோடு அவ்வப்போது காணும் தொந்தரவுகளைப் பரிஹரிப்பதில் அறிவாளிகளின் அனுபவமே பெரிதாகுர். ஆகையால் அதுகளை இங்கு விபரமாக எடுத்துக்காண்பிக்கத் தேவையிராதென்று நிதர்சனத்துடனே நிறுத்திவிடுகிறேன். ஏற்கனவே சொல்லியிருப்பதுபோல் நூற்றுக் கணக்கில் கஷாயங்களும் ஸ்வரஸங்களும் ஆஸவங்களும் சூர்ணங்களும் தைலங்களும் ரஸௌஷதங்களும் லேபங்களும் இச்சுரங்களுக்குப் பரிஹாரங்களாய்க் கூறப்பட்டுள்ளன. நிலைமைக்கேற்ற

படி அறிந்து ப்ரேயாகப்படுத்துவது வைத்தியர்களின்கடமையைப் பொறுத்ததாகும். விஷமஜ்ஜ்வரத்திலும் அவஸ்தானுஸாரம் பரிஹாரங்கள் பல கூறப்பட்டுள்ளன. சுர பரிஹார ஸாமான்ய விதிகளை இங்கும் அனுஷ்டித்தல் நலமாகுமாயினும் ஆம கபக்கோளாறுகள் ஆதிமுதல் மிகுதமாய் இங்கு இருக்காததால் லங்கனம் விசேஷமாகத்தேவைப்படாதென்றே சொல்லவேண்டும். வேண்டியிருப்பின் பொது விதிகளை யனுசரித்தல் வேண்டும். பின்னர் இதற்கென்று ஸித்தமாயுள்ள பற்பல கஷாய, அரிஷ்ட, மாத்திரை, ரஸ, தைலகல்க கிருதாதிகளை அவஸ்தானுஸாரம் யுக்தி அனுஸாரம் உபயோகப் படுத்தல் ஹிதமாகும் தொந்திரவுகளையும் கவனித்துப் பரிஹரித்தல் அவசியம். இங்கு அசட்டையாக விருப்பின் வியாதி நிச்சேஷம் விலகாது. ஜீர்ணஜ்வரத்திற்கோ யக்ருத், ப்லீகாஜ்வரங்களுக்கோ காளஜ்வரம் முதலிய தொந்திரவுகளுக்கோ விதை விதைப்பதாகும். இச்சுரத்திற்கு விசேஷ விதிகளாகவும் ஸாமான்ய ஜ்வரத்திற்கு ஸாதாரண முறையினும் "கொய்னு" வென்றும் ஓர் அபூர்வ ஔஷதி மிகச்லாக்யமாய்க் கண்டறிந்து இந்நாள் படிப்பாளிகள் கையாண்டு பயன்பெற்று வருகிறார்கள். நம் வைத்தியர்களில் பலரும் இம் முறையைப் பின்பற்றுகின்றனர். ஆனால் இதன் குணதோஷங்களை இங்கு சற்று கவனிப்பது அனுவச்யமாகாது.

---

## தினசரி விதி.

### (வள்ளாளபட்டி Lady Dr. G Naleni Amma)

சுகதேகியாயிருக்கும் மனிதர்கள் ஆயுள் விருத்திக்காக இரவில் கடைசி யாமத்தில் பிராம்ம முகூர்த்தத்தில் நித்திரையை விட்டு எழுந்திருக்கவேண்டும். பிறகு சரீர நிலைமைக்குத் தக்கவாறு மல மூத்திரம் விசர்ஜனம் செய்யவேண்டும். மிருதுவானதும் துவர்ப்பு எரிவு, கசப்பு, இவைகளோடு கூடினதுமான எருக்கு முதலான குச்சிகளால் தந்த மாம்சங்களுக்குக் கெடுதிநேரிடாதபடி காலைமாலை இரு வேளையும் பல் விளக்கவேண்டும். அஜீரணம், வாந்தி, காசம், சுவாஸம், அர்திதவாதம், தண்ணீர்தாகம், முகபாகம், இருதயரோகம், நேத்திரரோகம், சிரோரோகம், கர்ணரோகம், முதலான வியாதி

யஸ்தர்கள் பல் விளக்கக்கூடாது. வேண்டுமானால் வியாதிக்குத்தகுந்த கஷாயங்களில் நனைத்த பஞ்சினால் மெதுவாக விளக்கவேண்டும். அஞ்ஜனவிதி:—சௌவீராஞ்சனம் நேத்திரங்களுக்கு உபயோகமானதால் அதைத் தினந்தோறும் உபயோகிக்கலாம். ஏழு அல்லது எட்டு நாளுக்கொருமுறை கபத்தை இல்லாமல் செய்யக்கூடிய ரசாஞ்சனம் உபயோகிக்கலாம். நஸ்யம், கண்டூஷம், தூமம், தாம்பூலம் இவைகளையும் அனுஷ்டிக்கவேண்டும். ரணம், ரக்தபித்தம், நேத்ர ரோகம், விஷம், மயக்கம், மதம் இவைகளால் பிடிக்கப்பட்ட மனிதர்கள் தாம்பூலம் உபயோகிக்கக் கூடாது. அப்பியங்க வியாயாமாதிகள்:-தினந்தோறும் எண்ணை ஸ்நானம்செய்ய வேண்டும். இது நரை, சிரமம், வாதம் இவைகளைத் தடுக்கக்கூடிய சக்தியுடையது சிரசு, காது, பாதம் முதலிய இடங்களில் தைலம் நன்றாகத் தேய்க்க வேண்டும். கபரோகிகள், வமனாதி சுத்திசெய்தவர்கள், அஜீரணம் உள்ளவர்கள் இவர்கள் யாரும் எண்ணை ஸ்நானம் செய்யக்கூடாது. வாகைப்பொடி தேய்த்துக் குளிக்கவேண்டும். வெந்நீர் ஸ்நானம் சரீரத்திற்கு ஆரோக்யத்தை உண்டுபண்ணும் திறமையுடையது. சிரசுக்கு வெந்நீர் உபயோகித்தால் தலை முடிக்கும் நயனத்துக்கும் பலத்தைக் குறைக்கும். வாத ரோகம், நேத்திர ரோகம், முக ரோகம், கர்ணரோகம், அதிசாரம், உதரரோகம், பீனிசம், முதலான வியாதியுள்ளவர்கள் தினந்தோறும் குளிக்கக் கூடாது. சாப்பிட்டவுடனே கண்டிப்பாய் குளிக்கக்கூடாது, ரோமம், நகம் இவைகளை அடிக்கடி வெட்டி சுத்தம் செய்யவேண்டும். மல மார்க்கங்களை எப்பொழுதும் நிர்மலமாக வைத்துக்கொள்ளவேண்டும். சுகந்த பதார்த்தங்களைப் போட்டு காயவைத்த ஜலத்தை ஸ்நானத்துக்கு உபயோகிக்கவேண்டும். அழுக்கில்லாத வஸ்திரங்கள், ரத்தினம், சுகந்த சாதனங்கள், சித்தமந்திரம், மஹௌஷதம், இவைகளை எப்பொழுதும் தரிக்கவேண்டும்.

சாதாரண நியமனம்:—குடை, பாதரக்ஷை, இவைகளோடு கூடியும், முன்பக்கம் நன்றாய்ப்பார்த்துக்கொண்டும் நடக்கவேண்டும். இரவில், அத்யாவசியமான வேலைகளிருந்தால்தான் வெளியில் போகவேண்டும். தடிக்கம்பு, தலைப்பாகை தரித்து இவைகளுடைய சகாயத்தால் சஞ்சரிக்கவேண்டும். ஒரு தடவை சாப்பிட்டு ஜீரணமான

பிறகுதான் மறுவேளை சாப்பிடவேண்டும். மல மூத்திராதிகளை வலுக்கட்டாயமாய் வெளிப்படுத்தக்கூடாது. ஷுதுணர்ச்சி ஏற்படும்போது தடை செய்யக்கூடாது. ரோகம் ஏதாவது ஏற்பட்டால் சரீர சாஸ்திர நிபுணர்களாகிய வைத்தியரிடம் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளவேண்டும். சரீரம், பேச்சு, மனது, இவைகளால் ஹிம்சை, களவு முதலான பத்துவித கர்மங்களையும் செய்யாமல் இருக்கவேண்டும். கோபத்தை அடக்க முயற்சிக்கவேண்டும். அளவுக்கு அதிகமாகப் பேசக்கூடாது. புழு பூச்சி முதலான ஜந்துக்களையும் தங்களைப்போல் பாவிக்கவேண்டும். தனக்கு இஷ்டமில்லாத காரியங்களையும் அந்நியர்க்குச் செய்யக்கூடாது. எந்த நிலைமையில் இருந்தால் இரவும் பகலும் சந்தோஷமாய் இருக்கலாமோ அதைக் கையாடி கடவுள் ஸ்தோத்திரத்தோடு இருக்கவேண்டும்.

## ஹிருதயம் (பத்திராதிபர்)

ஹிருதய பதார்த்தத்தை நாம் அறிய முயலும்பொழுது அடியிற் கண்ட வாக்படர் வசனம் மிகுந்த உதவி புரிகின்றது. "ஸப்த சாதாரா: ரக்தஸ்யாத்ய: க்ரமாத் பரே | கபாம பித்த பக்வாநாம் வாயோர் முத்ரஸ்ய சஸ்ம்ருதா: | கோஷ்டாங்காளி ஸ்திதாந்யேஷு ஹிருதயம் க்லோம புப்புஸம் | யக்ருத் ப்லீஹா உந்துகம் வ்ருக்கௌ நாபி டிம்ப ஆந்த்ர பஸ்தப: |" இவ்வசனங்களின் பொருள்— "ஏழு ஆசயங்கள் சரீரத்தில் வரிசையாக அமைந்துள்ளன. முதலில் ரக்தாசயம், அதன் கீழ் கபாசயம், அதன் கீழ் ஆமாசயம், அதன்கீழ் பக்வாசயம், அதன்கீழ் வாதாசயம், அதன்கீழ் மூத்ராசயம், இவ்விதம் வரிசையாக அமைந்துள்ள ஏழு ஆசயங்களில் வரிசையாக 12 கோஷ்டாங்கங்கள் அமைந்துள்ளன. ரக்தாசயத்தில் ஹிருதயம், கபாசயத்தில் க்லோம, புப்புஸம், என்ற இரண்டு உறுப்புகள். ஆமாசயத்தில் யக்ருத், ப்லீஹா, என்ற இரண்டு உறுப்புகள், (இங்கு "நாபிஸ்தனாந்தரம் ஜந்தோ ராமாசய இதி ஸ்ம்ருத." | என்ற சரக வசனம் "ஸ சதுர்விதஸ்ய ஆஹாரஸ்ய ஆதார:" என்ற சுசுருத வசனம், "அசிதபீத லீட காதிதஸ்ய, ஆதார: ஸ்தானம்," என்ற டீகா வசனம் "உரோ ரக்தாசயஸ் தஸ்மாதத: ச்லேஷ்மாசாய ஸ்ஸ்ம்ருத:— ஆமாசயஸ்து ததத: தல்லிங்கம் சாகோப்ரவீத்" | என்ற பாவப்ர

காசவசனம், "ச்லேஷ்மாசயஸ் ஸ்யாதுரஸி தஸ்மா தாமாசயஸ்த்வத; "என்ற சார்ங்கதரவசனம், இவைகளைக் கவனித்தால் ஆமாசயம் என்பது சாப்பிட்ட ஆகாரம் தங்குமிடமாகிய Stomach என்ற இரைப்பை என்பது புலனாகிறது) மற்ற ஆசயங்களும் கோஷ்டாங்கங்களும் அப்ரகிருதமானதால் அவைகளை விவரிக்காமல் நிறுத்துகிறோம். கபாசய உறுப்புகளான க்லோம, புப்புஸம் என்ற உறுப்புகள் இரண்டும் ஆங்கிலத்தில் lungs என அழைக்கப்படும் உறுப்புகளாக முடிகின்றன. Heart க்கு வலதுபக்கத்திலுள்ள lung க்லோமா என்றும், Heart க்கு இடது பக்கத்தில் அமைந்துள்ள lung புப்புஸமெனவும் தெரிகிறது. அஷ்டாங்க ஸங்கிரஹத்தில்—"தஸ்ய வாமபார்ச்வேப்லீஹா புப்புஸச்ச, தக்ஷிணதோ யக்ருத்க்லோமச" என்றவிடத்தில்ப்லீஹாவும் அதற்குக்கீழே புப்புஸமும் என்று அர்த்தம் செய்வதற்கு க்ரம நியாமகமில்லை. தவிர ப்லீஹா, யக்ருத் என்ற இரண்டு உறுப்புகளும் ஆமாசயகோஷ்டாங்கங்களெனத் தீர்ந்த பிறகு க்லோமாவும் புப்புஸமும் ஆமாசயகோஷ்டாங்கங்களென்றோ அல்லது பித்தாசய கோஷ்டாங்கங்களென்றோ கூறிவிடில்கபாசயத்திற்கு கோஷ்டாங்கங்களின்றிப்போகும். மேலும் புப்புஸத்தை ஆமாசய பர்யாயமாகக் கொண்டால் முன்சொன்ன எல்லா வசனங்களும்விரோதிக்கும். க்லோமா என்பதை பித்தாசயத்தின் ஓர் பாகமாக நினைப்பதும் அனுசிதம். "உர: கண்ட சிர: க்லோம பர்வாண்யாமாசயோரஸ: | என்ற அஷ்டாங்க ஹ்ருதய வசனம் க்லோமாவை கபஸ்தானமாகச் சொல்லும்பொழுது நேர் விரோதமாக அதை பித்த ஸ்தானமாக எவ்விதம் ஒப்பலாம்? 'உதகவாஹிநாம் தாலு மூலம் க்லோமச" என்ற அஷ்டாங்க ஸங்கிரஹ வசனமும் பொருந்தாது. பாவப்ரகாசம் கண்டம் | கர்ப்பப்ரகரணத்தில் அடியில் கண்ட வசனங்கள் காணப்படுகின்றன—"உபாங்கானி ச கத்யந்தே தானி ஜாநீஹி யத்நத: | சோணிதாத் ஜாயதே ப்லீஹா வாமதோ ஹ்ருதயாதத: | ஹ்ருதயாத் வாமதோதச்ச புப்புஸோ ரக்தபேனஜ: | அதோ தக்ஷிணதச்சாபி ஹ்ருதயாத் யக்ருத: ஸ்திதி:—அதஸ்து தக்ஷிணே பாகே ஹ்ருதயாத் க்லோம திஷ்டதி | ஜலவாஹி ஸிரா மூலம் |" இதன் பொருள்—"ஹ்ருதயத்திற்குக்கீழே இடது பக்கமாக ப்லீஹா இருக்கிறது. ஹ்ருதயத்திற்கு இடது

பக்கத்தில் கீழே புப்புஸம் இருக்கிறது. இவ்விடத்தில் ப்லீஹா வுக்குக்கீழே புப்புஸம் என்ற அர்த்தம் செய்யமுடியாது. ஹிருதயத்தைக்கொண்டே புப்புஸத்தின் ஸ்தானத்தைச் சொல்லியிருப்பதால் ஹிருதயத்தின் இடது புரத்தில் என்ற அர்த்தம்தான் சாப்தம் ஹிருதயத்திற்குக் கீழேயும் புப்புஸம் வியாபித்து இருப்பது ஸுவ்யக்தம். அவ்விதமே ஹிருதயத்தின் வலது பக்கத்தில் கீழே யகிருத், ஹிருதயத்தின் வலது பக்கத்தில் கீழேக்லோமா" "தத்வாமே புப்புஸப்லீஹாள தக்ஷிணங்கேய கிருத் மதம்" என்ற சார்ங்கதர வசனமும் ஹிருதத்திற்கு இடது பக்கம் புப்புஸமும் ப்லீஹாவும் இருப்பதாகச் சொல்லுகின்றது. சுஸ்ருதஸம்ஹிதை சாரீரம் நான்காவது அத்யாயம் 17-வது சுலோக டல்லண வியாக்யானத்தில் "ஸ்தாநாந்மாமாக்னி பக்வாநாம் மூத்ரஸ்ய ருதிரஸ்ய ச | ஹிருத் உண்டுகம் புப்புஸச்ச கோஷ்டமித்யபிதீயதே | |" என்ற வசனத்தில் ஆமாசயம், புப்புஸம், முதலியவைகள் கோஷ்டமெனப்படும் என்று சொல்லப்பட்டிருப்பதால் ஆமாசயம் வேறு புப்புஸம் வேறு என்று புலனாகின்றது. அதே இடத்தில் அடியில்கண்ட விதம் டீகாவாக்யம் காணப்படுகின்றது—"தத்ரயகிருத் கிரஹணம் ரக்தாதார ஸார்ப்யேக ப்லீஹன உபலக்ஷணம், யகிருத் ஸமீபாநாம் ஹிருதயாதீநாம் ச|" இதன் பொருள் மூலத்தில் யகிருத்என்றபதத்தால் ப்லீஹாவையும் எடுத்துக்கொள்ளுவதுடன் "ஹிருதயம் முதலியவைகளையும்" எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதே. இங்கு "முதலிய" சப்தத்தால் க்லோம புப்புஸங்களைத்தான் கிரஹிக்கவேண்டும். அப்பொழுது டீகையின்மேல் வாக்யமான "தேந ஊர்த்வம் யகிருதாதி வ்யவஸ்திதம்" என்று ஆதிபதகிருஹீதமான க்லோம புப்புஸங்கள் யகிருத்திற்குமேல் பாகத்திலிருப்பதாகத் தென்படுவதால் யகிருத்திற்குக்கீழே க்லோமாவின் ஸ்தானத்தை நிர்ணயிப்பது அஸங்கதமாகும். சுஸ்ருத சாரீரம் நான்காவது அத்யாயம் 25வது கத்யடல்ஹண டீகையில் "புப்புஸ: = ஹிருதய நாடிகா லக்ன: ஸ்வநாமக்யாத:" என்று காணப்படுகிறது. ஹிருதய நாடியில் பற்றிக்கொண்டுள்ள ஓர் பிரசித்த உறுப்பு என்பது இதன் பொருள். சரகம் விமானஸ்தானம் ஐந்தாவது அத்தியாயத்தில் பத்தாவது கத்ய சக்ரபாணி வியாக்யானத்தில் "க்லோம ஹிருதயஸ்தபிபாஸாஸ்தானம்"

என்ற வசனத்தில் க்லோம என்பது ஹ்ருதயத்துடன் சேர்ந்துள்ள ஓர் உறுப்பென்பது புலப்படுகின்றது. மாதவ நிதானம் வித்ரதி நிதானத்தின் வியாக்யானத்தில்" க்லோம விருக்காதூர்த்வம் பிபாஸா ஸ்தானம்" என்று காணப்படுகிறது. இந்த அர்த்தம் எந்த மதத்திற்கும் பொருந்தவில்லை யென்பது கண்கூடு. இவ்வளவு உபபாதனங்களால் க்லோம. புப்புஸம், என்ற உறுப்புகள் ஹ்ருதயத்தின் பக்கத்திலுள்ள lungs என்ற உறுப்புகளே என்று நிர்ணீதமாகிறது. ஹ்ருதய க்லோம புப்புஸங்கள் சில வைத்யர்களுக்கு அப்ரஸித்தார்த்தங்களானாலும் எல்லா வைத்யர்களுக்குமே அவ்விதம் எனச் சொல்லமுடியாது. புப்புஸத்தைச் சொல்லும்பொழுது "ஸ்வராமக்யாதம்" என்று சமீபகாலத்திய வியாக்யாதாக்கள் சொல்லியுள்ளார்கள். ஹ்ருதயாத் யவதானங்கள் ச்ரௌதப்ரக்ரியா ஸித்தங்ளென ஏற்கனவே சொல்லியுள்ளோம். நமது கண்டனக்காரர் ச்ரௌத ப்ரக்ரியைகளில் திருப்தி யடையாவிட்டாலும் மற்றவர்கள் அதில் அவிசுவாஸம் கொள்ளமுடியாததலால் அதை இங்கபிராப்தாவஸரத்தில் நிரூபிக்கின்றோம். பூர்வமீமாம்சை பத்தாவது அத்யாயம் ஏழாவது பாதத்தில் முதல் அதிகரணத்தில் ஓர் விசாரம் காணப்படுகிறது. "அக்னீஷோமீயம் பசுமாலபேத" என்ற விஷயவாக்யத்தில் பூராபசுவும் ஓரே ஹவிஸ்ஸா? அல்லது பசுவின் அங்கமாகிய ஹ்ருதயாதி ஹவிஸ்ஸா? என்ற சந்தேகத்தில் ஹ்ருதயாதிதான் ஹவிஸ்ஸு என்று சித்தாந்தம் செய்யும்பொழுது சாஸ்திர தீபிகையில் அடியிற்கண்ட வசனம்காணப்படுகிறது. "ஹ்ருதயாதி சப்தா மாம்ஸ விசேஷ வசநா:" "ஹ்ருதயஸ் யாக்ரே அவத்யதி, அத ஜிஹ்வாயா:, அதவக்ஷஸ:" என்ற வசனத்தில் ஹ்ருதயம், ஜிஹ்வா, வக்ஷஸ், முதலிய 11 பதங்கள் மாமிச விசேஷத்தைப் போதிக்கின்றன என்பது அதன் பொருள். ஹ்ருதயம், ஜிஹ்வா, வக்ஷஸ், யகிருத், விருக்கங்கள், ஸவ்யபாஹு, பார்சுவத்பவம், தக்ஷிணச்ரோணி, குதம், ஆக இந்த 11 அவயவங்களும் மாமிச விசேஷங்கள். வக்ஷஸ் என்ற பதத்தால் இரண்டு lungs குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆனால் "ந க்லோம்ந:" என்ற வசனமும் "அஹ்வ்யபத்வாத்" என்ற வியாக்னஹேது வசனமும் காணப்படுவதால் வலது lung தள்ளுபடியானதால் மொத்தம் 11 அவயவங்களெனச்சொல்லப்

படுகிறது. வக்ஷஸ், என்பதும் உரஸ் என்பதும் ஏகார்த்தகங்களான தால் உரஸ் என்பது இரண்டு lungs களையும் போதிப்பதாகின்றது, ஆகவே கண்டனகாரர் சொல்லும் உரஸ் சப்தார்த்தம் அசங்கதமாகும். ஏனெனில் வக்ஷஸ் என்பது மாம்ச விசேஷ வசனமானதால்ஓர் குறிப்பிட்ட பாகத்தையே அது குறிக்கவேண்டும், பூர்வ மீமாம்சை ஐந்தாவது அத்யாயம் ஏழாவது பாதம் மூன்றாவது அதிகரணம் சாஸ்திர தீபிகையில் அடியில்கண்ட வசனம் காணப்படுகிறது—"ஹிருதயாதிப்ய: உத்தரார்தம் க்ருஹீத்வா" அதன் பொருள் ஸ்விஷ்டகிருத்யாகம் பிரதான ஹவிஸ்ஸுக்களான ஹிருதயாதி— அவயவங்களின் உத்தரார்த்தத்தை (பின் பகுதியை அதாவது ஹிருதயாதி ll அவயவங்களின் முற்பாதி பகுதியை அவதானம் செய்து பிரதான ஹோமம் செய்துவிட்டதால் அதுபோக மீதியுள்ள பிற்பாதி பகுதிகளை)க்கொண்டு செய்வதா என்று பூர்பக்ஷத்தில் கூறியிருப்பதைக் கவனித்தாலும் ஹிருதய சப்தம் வியஷ்டி வசனமெனப் புலப்படுகின்றது அவிச்சின்ன பரம்பரையாக நடந்து வரும் சிரௌதப் பிரக்கிரியா நிபுணர்களிடம் நத்கர்லம் இப்பதார்த்தங்களை யறிய முடிகின்றது. ஹிருதய சப்தம் க்ரிதயவாசியாகில் "மாம்ஸ விசேஷ வசநா:" என்பது பொருந்தாது போகும். ஆகவே ஹிருதய சப்தம் ஸ்வதந்திரமாகவும்க்லோமபுப்புஸ பதஸஹாயத்தாலும் வியஷ்டி வசனம் என்பது நிர்ணீதமாகின்றது. வியாகரணம் இரண்டாவது அத்தியாயம் முதல் பாதம் முதல் ஆஹ்நிக மகாபாஷ்யமையடத்தில் "ஸ்வர்கா பூர்வ தேவதாதி சப்தாநாமர்தா: ப்ரத்யக்ஷா பரிச்சேத்யத்வாத் இதம்தயா நக்யாயந்தே | தத்ர தேஷாம் கதம் அர்த்தா நிர்திச்யேரன் இத்யர்த்த. | த்ரைவித்ய வ்யவஹாராத் தேஷாம் அர்த்தோ விக்யாயத ஏவ I தஸ்மாத் விருத்தவ்யவஹாரேதேவ சப்தார்த்த ஸம்பந்த வ்யுத்பத்தி: அநிச்சதாபி யுக்தி வசாத் ஏஷ்டவ்யா இத்யர்த்த:" என்ற வசனப்படி ஹிருதயாதி பதார்த்தங்களை த்ரைவித்ய நிஷ்டர்களிடம் அறிவது சுலபமே. இதுமேற்காட்டியுள்ள வியாக்யா வசனங்களைப் பிரமாணமாகக் கொள்ள முடியுமா என்ற சந்தேகம் உதிப்பது சகஜம். ஏனெனில் வியாக்யாதாக்கள் பலவிடங்களில் ஸ்கலனமடைந்திருப்பதை யறிகிறோம். உதாஹரணமாக அஷ்டாங்க ஹிருதய வியாக்யானத்தில் அருணதத்

கர் "நஸஜ்ஜதே ஹேமபாங்கே" என்ற இடத்தில் "ஸஜ்ஜதே" என்று ஆத்மநேபதம் சிந்த்யம் என்கிறார். ஆனால் வாக்படர் ஸர்வச்-மணியானதால் சாஸ்திரீயமாகவே பிரயோகம் செய்துள்ளார். பாஷ்யத்தில் "ஸஜ்ஜதே" என்ற பிரயோகமும் அதற்கு கையட ஸமர்த்தனமும் நாம் காணுகிறோம். "ப்ராதர் புக்த்வா ச மிருத்வ ரம்" என்ற சுலோக வியாக்யானத்தில் புக்வா = தந்ததாவன காஷ ரஸம் பக்ஷயித்வா என்று பல் தேய்ப்பதற்குச் சாதனமான எருக்கம் குச்சி முதலியவைகளின் ரஸத்தை பக்ஷித்துவிட்டு பல் தேய் வேண்டும் என்று அர்த்தம் எழுதியிருக்கிறார். இது ஆபாஸம் எ பது ஸுவ்யக்தம். "தத்ர ரூக்ஷோ லகு: சீத:', என்ற இடத்தி "நரு அநுஷ்ணசீதோ வாயு: காணாதை: படித:" என்று த சாஸ்திரத்தில் வாயுக்கு இயற்கையில் உஷ்ண குணமோ அல்ல சீத குணமோ கிடையாதென்று சொல்லப்பட்டிருப்பதால் அதற்கு விரோதமாக இவ்வசனம் இருக்கிறதே என்று கேள்வி கேட்டு கொண்டு சமாதானமும் சொல்லியிருக்கிறார். தார்க்கிகர்களுடை வாயு, பஞ்சபூதங்களில் ஒன்றாகும். திரிதோஷங்களில் ஒன்றாகிய ஆயுர்வேத வாயு பூதத்வயஸமுதாய ஜந்யமென்பது ஸுவ்யக்த திரிதோஷ வாயுவை Air என்று இதரர்கள் பரிகசிப்பதற்கு அரு தத்தரே பிரலாபம் செய்துவிட்டார். ஆகவே வியாக்யானங்களி நாம் சிரத்தைகொள்ள முடியாவிட்டாலும் சரக ஸுச்ருத வா படாதி மூல கிரந்தங்களையொட்டிய வியாக்யானங்களை நாம் எப் பதில் அகௌசித்யம் கிடையாது.

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |